டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.02.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 185 - Madurai | Online Edition

# உரங்களின் சமச்சீர் பயன்பாடு நிலையான விவசாயத்திற்கு முக்கிய காரணி

புது தில்லி, ஜன.31

இந்தியாவின் விவசாய வரலாற்றில் பசுமைப் புரட்சி ஒரு தீர்க்கமான திருப்புமுனையாகும். 1960-களின் நடுப்பகுதியில் உரங்களால் அதிக மகசூல் ஏற்பட்டது. விரிவாக்கப்பட்ட நீர்ப் பாசனம், ரசாயன உரங்களின் பயன்பாடு ஆகியவற்றால் உற்பத்தி அதிகரித்தது. உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த விரைவான வளர்ச்சி தேசிய உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தது மட்டுமல்லாமல், பசியைக் கணிசமாகக் குறைத்து, கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்தியது. இந்தியாவை மற்ற வளரும் நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக நிலைநிறுத்தியது.

இருப்பினும் நைட்ரஜன் உரங்களை அளவுக்கு அதிகமாக நம்பியிருத்தல், கரிம உரங்களின் பயன்பாடு குறைவு ஆகியவை, ஊட்டச்சத்து ஏற்றத்தாழ்வுகள், மண்ணின் ஆரோக் கியத்தில் சரிவு ஆகியவற்றுக்கு வழிவகுத்தது.

சமநிலையற்ற வகையில் உரமிடுதல் மண் சீரழிவைத் தாண்டி நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகிறது. இந்த செயல் முறைகள் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு பங்களிக்கின்றன. இவை சுகாதார அபாயங்களையும் ஏற்படுத்துகின்றன.

எனவே, மண் வளத்தைப் பராமரிப்பதும், அறிவியல் பூர்வமாக நல்ல நடைமுறைகளைப் பின்பற்றுவதும் விவசாய உற்பத்தியின் நிலைத்தன்மைக்கு அடிப்படையாகும். மண் வளம், அதன் வேதியியல், இயற்பியல், உயிரியல் பண்புகளால் தீர்மானிக்கப்படுகிறது. இது திறமையான ஊட்டச்சத்து பயன் பாடு, பொருளாதார நம்பகத்தன்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான அடிப்படையை உருவாக்குகிறது. சமநிலை யற்ற உரமிடுதலால் ஏற்படும் சவால்களை குறைக்கும், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில், நீண்டகால உர பரிசோதனைகள்

குறித்த அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தை தொடங்கியது. பல்வேறு வகையான வேளாண் பகுதிகள், பயிர் முறைகளில் செயல்படுத்தப்பட்ட இந்த ஆய்வு, மண் ஆரோக்கியம், பயிர் உற்பத்தித்திறன் ஆகியவற்றில் நீடித்த உர பயன்பாட்டின் நீண்டகால விளைவுகளை மதிப்பிடுகிறது.

உரங்கள் பரவலாக கனிம மற்றும் கரிம உரங்களாக வகைப் படுத்தப்படுகின்றன. கனிம உரங்கள் என்பவை குறிப்பிட்ட ஊட்டச்சத்துக்களை செறிவூட்டப்பட்ட வடிவங்களில் கொண்ட ரசாயன சேர்மங்களாகும். இதனால் பயிர்களுக்கு துல்லியமான, உடனடி ஊட்டச்சத்து விநியோகம் கிடைக்கிறது.

கரிம உரங்கள் என்பவை விலங்கு எருக்கள், பயிர் எச்சங்கள் போன்ற இயற்கை மூலங்களிலிருந்து பெறப்படுகின்றன. அவை மண்ணின் செயல்பாடுகளை மேம்படுத்துவதோடு, சீரான வடிவத்தில் படிப்படியாக ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன,

சமச்சீர் ஊட்டச்சத்து மேலாண்மை என்ற முறையானது, ஊட்டச்சத்து உறிஞ்சுதலை அதிகப்படுத்தி இழப்புகளைக் குறைப்பதன் மூலம் உர பயன்பாட்டுத் திறனை மேம்படுத்து கிறது. அதே நேரத்தில் மேம்பட்ட தாவர வளர்ச்சி, பயிர் செயல்திறன், உற்பத்தித்திறன் ஆகியவற்றுக்கு இடையே ஒருங்கிணைந்த தொடர்புகளை வளர்க்கிறது. இது நீண்ட காலத்திற்கு மண் வளத்தை நிலைநிறுத்துகிறது.

சமச்சீர் உரமிடுதல் என்பது, பயிர் தேவைகள், மண் வள நிலை, பருவ நிலை நிலைமைகளின் அடிப்படையில், அனைத்து அத்தியாவசிய தாவர ஊட்டச்சத்துக்களை பொருத்தமான விகிதாச்சார முறைகளில் பயன்படுத்துவதாகும். இது நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) ஆகியவற்றை மட்டுமே பயன்படுத்தும் வழக்கமான நடைமுறையைத் தாண்டி, முழுமையான ஊட்டச்சத்து மேலாண்மை அணுகுமுறையை ஒருங்கிணைக்கிறது.

சமச்சீர் உரமிடுதல் நிலையான விவசாயத்தின் அடிப்படைத் தூணாக அமைகிறது. இது பரந்த அளவிலான வேளாண், பொருளாதார, சுற்றுச்சூழல் நன்மைகளை வழங்குகிறது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## தளிர்கீரைகள் வளர்ப்பு/மதிப்புகூட்டல் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் காய்கறி அறிவியல் துறையின் சார்பாக வரும் 5.2.26 அன்று தளிர்கீரைகள் வளர்ப்பு மற்றும் மதிப்புகூட்டல் குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

மனித உடல் நலத்திற்கு தேவையான பெருமளவு சத்துத் தேவையை தளிர்கீரைகள் நிறைவு செய்கின்றன. தளிர்கீரை களிலிருந்து பெறப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் ஊட்டச்சத்து நிறைந்தவையாகவும் உடல் நலத்தை மேம்படுத்துவதாகவும் உள்ளன. இதனைக் கருத்தில் கொண்டு தளிர்கீரைகள் சாகுபடி மற்றும் மதிப்பு கூட்டல் குறித்த திறன் பயிற்சி தொழில் முனைவோருக்கு வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

- செயல்முறை சாகுபடித் திறன்கள்
- ஊட்டச்சத்து நன்மைகள்
- உணவுப் பாதுகாப்பு வழிமுறைகள்
- வணிகத்துக்கு வழிகாட்டல்
- தர நிலை நிறுத்தம்
- நீடித்த வருவாய்
- மதிப்பு கூட்டல்
- சந்தை வாய்ப்புகள்

ஒரு நாள் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சிக் கட்டணமாக ரூ.2,000/- (சரக்கு மற்றும் சேவை வரி 18 விழுக்காடு உள்பட) செலுத்த வேண்டும்.

**பயிற்சி நிகழ்விடம் :** காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண் 07 (தாவரவியல் பூங்கா), மருதமலை சாலை). தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. (காந்திபுரத்திலிருந்து 1A, 1B, ID, 70,76,64D) (தொடர்வண்டி நிலை யத்திலிருந்து, சிங்காநல்லூரில் இருந்து 1C).

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறி அறிவியல் துறை, தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் பு த்தூர். மின்னஞ்சல் : vegetables@tnau.ac.in, கைபேசி : 89036 94612, தொடர்பு நேரம் : திங்கள் முதல் வெள்ளி வரை (காலை 9.00 முதல் மாலை 5.00 வரை) தொடர்பு கொள்ளலாம்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# தென்னையில் பாஸ்போபாக்டீரியா கரைசல் பயன்பாடு செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி



தேனி, ஜன.31

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, கன்னிசேரவைப் பட்டி கிராமத்தில், வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை சார்பில் நடைபெறும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் (RAWE) கீழ், மதுரை வேளாண் கல்லூரி மாணவி அன் ரிட்டா, தென்னை மரங்களில் மகசூல் அதிகரிக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும் உதவும் பாஸ்போபாக்டீரியா கரைசல் பயன்பாடு குறித்து செயல் விளக்கம் வழங்கினார்.

இந்த செயல் விளக்கத்தில், பாஸ்போபாக்டீரியா நுண்ணுயிர் உரத்தின் முக்கியத்துவம், அதன் பயன்கள், தயாரிப்பு முறை, சரியான அளவு மற்றும் பயன்படுத்தும் காலம் குறித்து விவசாயி களுக்கு தெளிவாக விளக்கப்பட்டது.

பாஸ்போபாக்டீரியா பயன்படுத்துவதன் மூலம் மண்ணில் உள்ள பாஸ்பரஸ் சத்து செடிகளால் எளிதில் உறிஞ்சப்படுவதால், தென்னை மரங்களின் வளர்ச்சி மேம்படுவதோடு, காய்ப்புத் திறன் மற்றும் தேங்காய் அளவும் அதிகரிக்கும் என எடுத்துரைக் கப்பட்டது. மேலும், இரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் முறைகளும் விவரிக்கப்பட்டன. செயல் விளக்கத்தின் போது விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, தங்களது சந்தேகங் களை முன்வைத்தனர். அதற்கு அன் ரிட்டா தெளிவான விளக்கங்களுடன் பதிலளித்தார். இதன் மூலம், பலரும் இந்த தொழில்நுட்பத்தை தங்களது தோட்டங்களில் நடைமுறைப் படுத்த முன்வந்தனர்.

இந்த செயல் விளக்கம், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், நிலைத்த வேளாண்மையை மேம்படுத்தவும் உதவும் வகையில் அமைந்தது.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

நன்றி

# வாலாஜாபாத் வட்டாரத்தில் பனை விதை நடவு- எண்ணிக்கை பணியில் மாணவர்கள் பங்கேற்பு



காஞ்சிபுரம், ஜன.31

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் வட்டாரம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பனை மர வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் பனை விதை நடவு செய்யப்பட்ட பகுதிகளில் பனை விதை எண்ணிக்கை மேற்கொள்ளும் பணி நடைபெற்றது. இந்த பணியில் டான் போஸ்கோ வேளாண் கல்லூரி, அரக்கோணம் சேர்ந்த RAWE (Rural Agricultural Work Experience) பயிற்சி மாணவர்கள் தீவிரமாக பங்கேற்றனர். இந்நிகழ்வு "விதைகள்" சமூக நல அமைப்பின் (NGO) ஒத்துழைப்புடன் நடைபெற்றது.

மாணவர்கள், வாலாஜாபாத் வட்டாரத்தில் முன்பாக நடப்பட்ட பனை விதைகளின் உயிர்வாழ்வு நிலை, வளர்ச்சி நிலை மற்றும் மொத்த எண்ணிக்கை ஆகியவற்றை நேரடியாக கள ஆய்வு செய்து பதிவு செய்தனர். இதன் மூலம் பனை மர வளர்ச்சியின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்து, எதிர்கால பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. இந்த பணி, மாணவர்களுக்கு கள அனுபவம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு மற்றும் சமூக பங்களிப்பு ஆகியவற்றை வழங்கியதுடன், பனை மர பாதுகாப்பின் அவசியத்தை பொதுமக்களிடையே எடுத்துச் சொல்லும் முக்கிய முயற்சியாக அமைந்தது.

# பயறு வகைகளில் விதை நேர்த்தி செய்யும் செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்

மதுரை, ஜன.31

மதுரை வேளாண்மைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் யோகேஷ் ஆ.ரா. மேலூர் அருகே உள்ள நாவினிப்பட்டி கிராமத்தில் தனது கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக இப்பயிற்சியை அவர் வழங்கினார்



இந்நிகழ்ச்சியில் RHIZOBIUM sps. எனும் நுண்ணுயிரியை விதை நேர்த்தியில் பயன் படுத்துவதால், பயிருக்கு தேவையான தலைசத்து நேரடியாக பயிருக்கு கிடைக்கிறது.

மேலும் இதனால் ரசாயன உரத்தின் தேவையை குறைக்க முடிகிறது. இதனால் விவசாயிகளின் பயிர்களுக்கு தேவையான தலைசத்தும் கிடைக்கிறது, ரசாயன உரம் வாங்கும் செலவும் குறைகிறது என்று விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.




# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மியாபி அக்ரோசயின்ஸ் சர்வீசஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோயம்புத்தூர், ஜன.31

M/s.மியாபி அக்ரோசயின்ஸ் சர்வீசஸ் (MASS) அனுபவம் வாய்ந்த வேளாண் ஆராய்ச்சியாளர்களின் குழுவின் செயல் படும் நிறுவனம் ஆகும்.



வேளாண் இரசாயனங்கள், உயிரி பூச்சிக்கொல்லிகள், உயிர் தூண்டிகள், உரங்கள், தாவர ஊட்டச்சத்துகள், விதைகள் மற்றும் தாவர வளர்ச்சி தூண்டிகள் மற்றும் கட்டுப்படுத்திகளுக்கான முழுமையான ஆராய்ச்சி சோதனை சேவைகளை வழங்குகிறது. பல்வேறு வேளாண் காலநிலை சூழ்நிலைகளில் தயாரிப்பு களின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டை அறிவியல் முறையில் மதிப்பீடு செய்து, பாதுகாப்பான, நிலைத்த மற்றும் விவசாயி மையமான வேளாண் புதுமைகளை ஆதரிப்பதே இச்சேவைகளின் நோக்கமாகும். இது தொடர்பாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் மற்றும் M/s.மியாபி அக்ரோசயின்ஸ் சர்வீசஸ் நிறுவன மற்றும் தலைமை செயல் அதிகாரி முனைவர் ஆசைத்தம்பி மணிக்கம் ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணை வேந்தர் மற்றும் பதிவாளர் முனைவர் கா.சுப்ரமணியன், முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந் துணர்வு ஒப்பந்தம் 29.01.26ல் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் முதன்மையர் (SPGS), முனைவர் சி.பாபு, தாவர உயிரி தொழில்நுட்பத் துறையின் தலைவர் மற்றும் பேராசிரியர் முனைவர் ஈ.கோகிலா தேவி மற்றும் முனைவர் ஆர்.சுரேஷ், துணைவேந்தரின் தொழில்நுட்ப தனி அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

### மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

### உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# நீர் மேலாண்மைப் பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தினேஷ்.அ, ராம்குமார்.சா.சு.பூ, ரித்திஸ்.கு.சி, ரூசோ அருள்ராஜ். அ.மெ, சந்தோஷ்.ப, சிவா.ரா, வைரமுத்து.ப, விகாஷ், சௌந்தர்யன்.வே, வினோத்குமார்.வீ, விஸ்வநாதன்.சே ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் மண்ணச்சநல்லூரில் தங்கி தொடர்ச்சியாக விவசாயிகளை சந்தித்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தின்னகோணம் கிராமத்தில் விவசாயிகளுக்கு நீர் மேலாண்மை பற்றி விழிப்புணர்வு உரை நிகழ்த்தினர். மேலும் விவசாயிகளுக்கு நீரை சிக்கனமாக பயன் படுத்தும் முறைகள் பற்றியும், சொட்டுநீர் பாசனம், காய்ச்சலும் பாய்ச்சல் பற்றியும், பண்ணைக் குட்டை வெட்டி மழைநீரை சேகரிக்கும் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தனர். இதில் அந்த கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்துக்கொண்டு ஐய்யாற்றின் வரலாறு மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் மாணவர்களுக்கு தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு மரக் கன்றுகளை மாணவர்கள் வழங்கினர்.

# மாமரத்தைத் தாக்கும் கரும்பூஞ்சை நோய் தடுப்பு செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, ஜன.31

மதுரை, யா.ஒத்தக்கடை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் மாணவி அ.பாலதர்ஷினி, நிலக்கோட்டை வட்டார ராஜ தானி கோட்டையிலுள்ள விவசாயிகளிடம் மா மரத்தைத் தாக்கும் கரும்பூஞ்சை நோய் (Sooty Mould) கட்டுப்பாடு குறித்த செயல் விளக்கம் அளித்தார். அதில் 5% மைதா மாவு கரைசல் என்னும் உத்தியைப் பயன்படுத்தினர். 5% என்பது 100ல் 5 பங்கு. அதாவது



1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் மைதா மாவைக் கட்டி இல்லாமல் கலந்து, தெளிப்பான் மூலம் பாதிக்கப்பட்ட இலையில் அந்த கரைசலை அடிக்க வேண்டும். அந்தத் தண்ணீர் காய்ந்தவுடன் மைதா துகள்களோடு அந்த கரும்பூஞ்சையும் ஒட்டிக்கொண்டு உதிர்ந்து விடும். பிறகு இலைகள் பச்சையாக மரம் வளமாக மாறிவிடும். இது பற்றிய துண்டுப் பிரசுரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.



# ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விவசாயிகளுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்கின்றன? தெரியுமா?



தமிழகம் முழுவதும் 284 வேளாண் விற்பனைக் கூடங்கள் (REGULATED MARKET) வேளாண் விற்பனை மற்றும் வணிக துறையின் ஒழுங்கு முறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை அந்த அந்த மாவட்ட விற்பனை குழுவின் (MARKET COMMITTE) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன என்பது நாம் அறிந்ததே.

விவசாயிகள் விளைவிக்கப்பட்ட அனைத்து விளைப்பொருட் களையும் கொண்டு வந்து உலர வைத்து காய வைப்பதற்கு உலர்களம் (DRYING YARD) வசதியும் சேமித்து வைப்பதற்கும் சேமிப்பு கூடமும் கிட்டங்கி ஒழுங்கு முறை விற்பனை கூடங் களில் இருப்பு வைத்து நல்ல விலை வரும்போது விற்பனை செய்யலாம்.

**என்னென்ன வசதிகள் உள்ளன தெரியுமா?**

1) குறைந்த வாடகையில் இருப்பு வைக்கும் வசதி.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த விளைபொருட்களை, ஒழங்கு முறை விற்பனை கூடத்தில் இருப்பு வைப்பதற்கு நாள் ஒன்றுக்கு ஒரு குவிண்டாலுக்கு 25 பைசா வீதமும், கொள் முதல் செய்யும் விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 1 குவிண் டாலுக்கு 50 பைசா வீதமும் குறைந்த வாடகையில் இருப்பு (STOCK) வைத்து கொள்ளலாம்.

**2) பொருளீட்டு கடன் வசதி (PLDGE LOAN)**

சிறு/குறு விவசாயிகளுக்கு விளைபொருட்களின் மொத்த மதிப்பில் 75% வீதமும், இதர விவசாயிகளுக்கு, மொத்த மதிப்பில் 50% அல்லது அதிக பட்சமாக 5 லட்சம் வரை பொருளீட்டு கடன் பெறலாம்.

**3) இருப்பு வைக்க காலம் எவ்வளவு?**

அதிகபட்சமாக விளைபொருட்களை 180 நாட்கள் வரை இருப்பு வைத்துக் கொள்ளலாம்.

**4) மின்னணு தேசிய வேளாண் சந்தை திட்டம் இ.நாம் (E.NAM)**

இத்திட்டத்தில் விவசாயிகளின் விளைப்பொருட்களின் விளைபொருட்கள் தரப் பகுப்பாய்வு செய்யப்பட்டு மின்னணு முறையில் வர்த்தம் மேற்கொள்ளப்பட்டு, உரிய கொள்முதல் தொகையை உடனடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மின்னணு விலைப்பட்டியல் வைக்கப் பட்டு அன்றாட விலை விபரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**5) விலை ஆதரவு திட்டம் (MSP)**

மத்திய அரசின் விலை ஆதரவு திட்டத்தின்கீழ், NAFED நிறுவனத்தின் மூலமாக பயறு வகை பொருட்கள் குறைந்த பட்ச ஆதார விலையில் (MSP) கொள்முதல் செய்யப்பட்டு விவசாயி களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

**6) குளிர்பதன கிட்டங்கி**

பெரும்பாலான விற்பனை கூடங்களில் 25 மெ.டன்/100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிட்டங்கி (A.C GODOWN) அமைக்க பட்டுள்ளது. காய்கறிகள், பழங்கள், மிளகாய் வத்தல், புளி போன்றவற்றை இருப்பில் வைக்கலாம்.

**7) உழவர் நலத் திட்டங்கள்**

விற்பனைக் கூடங்களில் வருடத்திற்கு ஒரு மெ.டன் விளை பொருளை விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு காப்பீடு வசதி (இன்ஸ்சூரன்ஸ்) உண்டு. விபத்து, பாம்பு கடி போன்றவற்றால் ஏற்படும் நிகழ்வுக்கு பணம் வழங்கப்படும்.

**8) வணிகர்கள் ஒழுங்குமுறை**

ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் கொள்முதல் செய்யும் வணிகர்களிடத்தில் 1% சேவை வரி (CESS) வசூலிக்கப்படும். விவசாயிகளிடத்தில் எந்த வரியும் வசூலிக்கப்படாது.

**9) இலவசமாக தரம் பிரித்தல்**

விவசாய விளைபொருட்களை தரம் பிரித்து (GRADING) செய்து விற்பனை செய்வதால் கூடுதலான வருமானம் கிடைக்கும்.

**10) விவசாயிகளுக்கு இலவச தங்கும் அறை மற்றும் கழிப்பிட வசதி**

இத்தகைய வசதியுள்ள இடத்தில் விற்பனை செய்வது எளிதாகும்.

மேலும் விபரங்களுக்கு சம்மந்தப்பட்ட விற்பனைகூட கண் காணிப்பாளரை அணுகலாம். தற்போது விளைபொருட்கள் அறுவடை தருணம் என்பதால் மேலே கண்ட வசதிகளையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திட வேண்டுகிறோம்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.

# சோளம் தண்டு துளைப்பான் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி



மதுரை, ஜன.31

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவி மீ.குரு சங்கீதா, தனது ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், மேலச்சொக்கநாதபுரம் கிராமத்தில் 19.01.26 அன்று விவசாயிகளுக்காக சோளம் தண்டு துளைப்பான் (Sorghum Stem Borer) மேலாண்மை குறித்த பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார்.

பயிற்சியின் போது, சோளத்தில் தண்டு துளைப்பான் தாக்குதலால் ஏற்படும் மைய இலை உலர்தல் (டெட் ஹார்ட்), செடியின் வளர்ச்சி குறைவு, தண்டின் உள்ளே துளையிடுதல் போன்ற முக்கிய சேத அறிகுறிகளை விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கினார். மேலும், இப்பூச்சி தாக்குதல் காரண மாக ஏற்படும் மகசூல் இழப்புகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. இதில், சரியான காலத்தில் விதைப்பு, வயல் சுத்தம், எதிர்ப்பு திறன் கொண்ட ரகங்கள் பயன்பாடு மற்றும் தேவைக்கேற்ற ரசாயன கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவை வலியுறுத்தப்பட்டன.

இந்த பயிற்சி நிகழ்ச்சியில் விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்கள் சந்தேகங்களை கேட்டறிந்து விளக்கம் பெற்றனர். இந்நிகழ்ச்சி, சோளம் தண்டு துளைப்பான் மேலாண்மை குறித்து பயனுள்ள மற்றும் விழிப்புணர்வு அளிக்கும் பயிற்சியாக அமைந்தது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# 1,000 ஏக்கரில் பிரம்மாண்ட செங்குத்து விவசாய நகரம் 90% குறைந்த நீர், 9 மடங்கு அதிக உணவு – சீனாவின் புதிய சாதனை!




தூத்துக்குடி, ஜன.31

சீனா தனது புதிய முயற்சியாக 1,000 ஏக்கர் பரப்பளவில் மிகப்பெரிய செங்குத்து விவசாய நகரத்தை (Vertical Farming City) உருவாக்கியுள்ளது. பாரம்பரிய விவசாயத்தால் சாத்தியமில்லாத அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

செங்குத்தாக அடுக்கப்பட்ட கோபுரங்கள் போன்ற அமைப்பில் பயிர்கள் வளர்க்கப்படுவதால், சாதாரண நிலப்பரப்பை விட 9 மடங்கு அதிக உணவை உற்பத்தி செய்ய முடிகிறது. இதில் பயன்படுத்தப்படும் 'க்ளோஸ்டு–லூப்' (Closed-loop) பாசன முறை மற்றும் ஈரப்பதத்தை மறுசுழற்சி செய்யும் தொழில் நுட்பம் காரணமாக, வழக்கமான விவசாயத்தை விட 90% குறைவான நீரே போதுமானது.

ஒவ்வொரு அடுக்கிலும் பயிர்களுக்குத் தேவையான LED ஒளி, ஊட்டச்சத்து மற்றும் வெப்பநிலை ஆகியவை AI (செயற்கை நுண்ணறிவு) மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இதனால் பயிர்கள் திறந்தவெளி நிலங்களை விட வேகமாக வளர்கின்றன. பயிர்கள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் வளர்வதால் வறட்சி, வெள்ளம் அல்லது பருவகால மாற்றங்களால் உற்பத்தியில் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை. ஆண்டு முழுவதும் தடையின்றி அறுவடை செய்ய முடியும். விளைநிலங்களை வெளிப்புறமாக விரிவுபடுத்தாமல் மேல் நோக்கி அடுக்கப்படுவதால், மக்கள் அதிகம் வாழும் நகரங்களுக்கு அருகிலேயே பெருமளவு காய்கறிகளை விளைவிக்க முடியும். இது போக்குவரத்து செலவையும், புகை உமிழ்வையும் வெகுவாகக் குறைக்கிறது.

இந்த 1,000 ஏக்கர் செங்குத்து விவசாய நகரம், வளர்ந்து வரும் உலக மக்கள் தொகைக்குத் தேவையான உணவுத் தேவையைச் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பில்லாமல் பூர்த்தி செய்வதற்கு ஒரு மிகச்சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது.

நன்றி : எச்ஆர் தமிழ் நியூஸ்

தமிழாக்கம் : **கோ.சுரேஷ்குமார், மைக்ரோ கிரீன் வளர்ப்பு செயல்பாட்டாளர், இயற்கை விவசாய ஆர்வலர், கோவில்பட்டி.**

# கால்நடை பராமரிப்பின் முக்கியத்துவம் – ஒரு பார்வை

கால்நடை வளர்ப்பு, பால், மாடு, ஆடு, இறைச்சி போன்ற விலங்குகளுக்கு மிகவும் முக்கியமானது. மாடுகளின் ஆரோக்கியம் பண்ணையின் வருவாய்க்கும், குடும்பத்திற்கும் முக்கியம்.

**1. அம்மை நோய் (மூக்கு–வாய் நோய்/Foot and Mouth Disease)**

அம்மை நோய் என்பது மிகவும் தொற்றான நோய், பெரும்பாலும் மாடுகள், ஆடுகள், மாடுகள் மற்றும் சில நேரங்களில் காளைகளில் ஏற்படும்.

**அறிகுறிகள் :** விலங்கின் வாயில் புண்கள் தோன்றுதல், கால் களில் காயம், நடக்க முடியாமல் ஆவதுபோல் இருப்பது, உணவு சாப்பிடாமை, பால் குறைதல், உடல் வெப்பம் அதிகரித்தல்.

**நடவடிக்கைகள் :** பாதிக்கப்பட்ட மாடுகளை தனிமைப்படுத்துதல், சந்தேகம் இருப்பின் உடனே அந்த மாடுகளை மற்ற மாடுகளி லிருந்து பிரித்து வைக்கவும். பண்ணையில் உணவளிக்கும் போது பாதிக்கப்பட்ட மாடுகள் வேறு மாடுகளிடம் இருந்து தனியாக இருக்க வேண்டும்.

**சுத்தம் மற்றும் கிருமி நாசனம் :** கை, பாதம், உடைகளை கிருமி நாசினியால் சுத்தம் செய்யவும். வீட்டில் துணிகளை + 60°C வெப்ப நிலையில் கழுவவும். பாதிக்கப்பட்ட மாடுகளுக்குப் பயன்படுத்திய பாட்டில்கள், பாத்திரங்கள் மற்றும் உபகரணங்களை சுத்தம் செய்யவும்.

**நோய் பரவல் தடுப்பு :** பூச்சி விரட்டிகள் மற்றும் கிருமிநாசினி மூலம் மாடுகளை சிகிச்சை செய்யவும். பாதிக்கப்பட்ட கிராமங்களில் மற்ற மாடுகளை தனித்தனியாக வைக்கவும். நீர் ஆதாரங்கள், குழம்பு, உரம் போன்ற இடங்களில் கிருமிகள் வளராமல் தடுப்பது முக்கியம்.

**மருத்துவர் ஆலோசனை :** சந்தேகம் ஏற்பட்டால் உடனே கால்நடை மருத்துவரை அழைக்கவும். தடுப்பூசிகள் பரிந்துரைக்கப் பட்டால் அவற்றை மேற்கொள்ளவும்.

**2. கோமாரி நோய் (Pox / Skin Lesion Diseases)**

கோமாரி நோய் என்பது கால்களில், பற்களில் மற்றும் தோலில் புண்கள் உருவாகும் நோய்.

**அறிகுறிகள் :** கால்கள் மற்றும் பற்களில் புண்கள் தோன்றுதல், பால் குறைதல், விலங்கு உடலில் சோறு காயங்கள் தோன்றுதல்.

**நடவடிக்கைகள் :** கிருமி நாசினி பயன்படுத்துதல், பாதங்களில் உள்ள காயங்களுக்கு 5:1 விகிதத்தில் நிலக்கரி தார் மற்றும் தாமிர சல்பேட் கலவையை பயன்படுத்தலாம். இதன் மூலம் புண்கள் குணமாகும் மற்றும் நோய் பரவல் குறைகிறது.

**தனிமைப்படுத்துதல் :** பாதிக்கப்பட்ட மாடுகளை வேறு மாடுகளிடம் இருந்து தனியாக வைக்கவும். உடனடியாக கால்நடை மருத்துவரை அழைக்கவும்.

**தடுப்பு நடவடிக்கைகள் :** அதிக பால் தரும் மாடுகள் மற்றும் பாலுக்காக வளர்க்கப்படும் மாடுகளை பாதுகாக்க வேண்டும். ஆறு மாத இடைவெளியில் இரண்டு தடுப்பூசிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். பண்ணையின் உபகரணங்களை சுத்தம் செய்யவும். மாடுகள் கழித்து விட்ட இடங்களில் மீதமுள்ள உரம் மற்றும் கழிவு களை அகற்றவும்.

### 3. மடி வீக்கம் (Udder Swelling / Mastitis)

மடி வீக்கம் என்பது பால் கொடுக்கும் மாடுகளில் ஏற்படும் முக்கியமான நோய்.

**அறிகுறிகள் :** மடியில் வீக்கம், சூட palpate செய்யும் போது உணர்கிறது, பால் தரம் குறைதல். சில சமயங்களில் வெள்ளை அல்லது சிவப்பு பால் வருதல்.

**நடவடிக்கைகள் :** நோய் வாய்ப்பட்ட மாடுகளை தனித்தனியாக வைக்கவும், உடனே கால்நடை மருத்துவரை அழைக்கவும்.

**பாக்டீரியா தொற்றால் ஏற்படும் வீக்கம் :** முழுமையான குணம் சில நேரங்களில் சிக்கலானது. முதலில் சிறிய அளவில் மட்டுமே குணம் அடையலாம்.

**மருந்துகள் :** பழைய மருந்துகள் (அக்ரிஃப்ளேவின், கிராமிசிடின்) பயன்படுத்தப்படாது. புதிய மருந்துகள் (சல்போனமைடுகள், பென் சிலின், ஸ்ட்ரெப்டோமைசின்) பரிந்துரைக்கப்படும்.

### 4. பால் காய்ச்சல் (Milk Fever / Hypocalcemia)

பால் காய்ச்சல் என்பது மாடுகளில் கால்சியம் குறைவால் ஏற்படும் நோய்.

**அறிகுறிகள் :** திடீர் தளர்ச்சி, நடக்க முடியாமை, சுவாசக் கோளாறு, இரத்த ஓட்டத்தில் குறைவு.

**நடவடிக்கைகள் :** ஆரம்ப கட்டங்களில் : வாய்வழியாக கால்சியம் வழங்குதல்

**பின் கட்டங்களில் :** நாம்பு வழியாக கால்சியம் வழங்கல்

**மருத்துவரின் கவனத்தில் சிகிச்சை :** எந்தவொரு சிகிச்சையும் தகுதியான கால்நடை மருத்துவரால் செய்யப்பட வேண்டும். சரியான நேரத்தில் சிகிச்சை செய்யாவிட்டால், மாடு இறக்கலாம்.

**5. பொதுவான பராமரிப்பு அறிவுறுத்தல்கள்**

சந்தேகமான மாடுகளை உடனே தனிமைப்படுத்துதல். கை, பாதம், உடைகளை கிருமிநாசினியால் சுத்தம் செய்தல். பண்ணை உபகரணங்கள், பாத்திரங்கள் மற்றும் துணிகளை சுத்தம் செய்தல், பூச்சி விரட்டிகள் மற்றும் தடுப்பூசிகள் மூலம் நோய் பரவலை தடுக்குதல், தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து கவனித்தல்.

மேலும் விவரங்களுக்கு, **தோ.அந்தோணியம்மாள், இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் பா.குணா, இணைப் பேராசிரியர் மற்றும் குழு ஒருங்கிணைப்பாளர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா, உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வை யாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# எருக்குச் செடியை பசுமை உரமாகப் பயன்படுத்தும் முறைகளை விளக்கிய வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, ஜன.31

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், போ.மீனாட்சிபுரம் கிராமத்தில் தென்னைப் பயிரில் எருக்குச் செடி (Calotropis) பசுமை உரமாகப் பயன்படுத்தும் முறைகள் குறித்து செயல்விளக்கம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியை மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவி இம்ரானா.ப, RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் கீழ் நடத்தினார்.

செயல்விளக்கத்தின் போது, தென்னை மரங்களைச் சுற்றி எருக்குச் செடியை குழிகளில் வைத்து பசுமை உரமாகப் பயன் படுத்தும் முறையை விளக்கினார். இந்த முறையின் மூலம் மண்ணின் உரச்சத்து மேம்பட்டு, தேங்காயின் பூ மொட்டு (Button) உருவாக்கம் அதிகரிக்கும் என்றும், தென்னை மரங்களில் அதிக மகசூல் பெற முடியும் என்றும் எடுத்துரைத்தார். மேலும், எருக்குச் செடி பசுமை உரம் பயன்படுத்துவதால் தென்னையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தும் கணவாய் வண்டு (Rhinoceros Beetle) தாக்குதலை கட்டுப்படுத்த முடியும் என விளக்கினார். இதன் மூலம் மரத்தின் இளம் இலைகள் மற்றும் மையப்பகுதி பாதுகாக்கப்படும் என்றும் கூறினார்.

பயிற்சியில் கலந்து கொண்ட கிராம மக்கள் தென்னைப் பயிரில் ஏற்படும் நோய்கள், பூச்சி தாக்குதல், இலை மஞ்சள் நிறமாதல், உச்சி உலர்தல், மற்றும் மகசூல் குறைவு போன்ற பிரச்சினைகள் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவற்றிற்கு மாணவி இம்ரானா.ப தெளிவான விளக்கங்களை அளித்து, ஒருங்கிணைந்த நோய் மற்றும் பூச்சி மேலாண்மை முறைகள் குறித்து எடுத் துரைத்தார். இந்த செயல்விளக்கம் மூலம் தென்னை விவசாயி களிடையே இயற்கை முறையில் மகசூல் உயர்த்தும் தொழில் நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் இதனால் பயனடைந்ததாக தெரிவித்தனர்.

# விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்

செங்கல்பட்டு, ஜன.31

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன் பேட்டையில் இயங்கி வரும் எஸ் ஆர் எம் வேளாண்மை அறிவியல் கல்லூரியை சேர்ந்த தோட்டக்கலை துறை நான்காம் ஆண்டு தர் ஸ்டோன் குழு மாணவர்கள் 11 பேர் (விக்னேஷ், ஜெயசூர்யா, தமிழ்மணி, நித்திஷ்குமார், ரூபன் ராஜ், ஜீவானந்தம், ஹரிகரன், சுதர்சன் சக்தி, செல்வபதி, சாம் சுந்தர், யோகேஸ்வரன்) ஆகியோர் கிராம தோட்டக்கலை பணி அனுபவ திட்டத்தை யொட்டி சித்தாமூர் வட்டம் பூரியம்பாக்கம் கிராமம் விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம் டிசம்பர் 27யில் அளித்தனர்.

இதில் பேராசிரியர் கோபி பலப்பயிர் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் வறண்ட நிலங்களில் பழப்பயிர் (நெல்லி, அத்தி விளாம்பழம், நாவல் பழம், கொடுக்காப்புளி, இலந்தைப்பழம், பேரிச்சை மாதுளை சீதாப்பழம்) சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் கவாத்து செய்தல், வளர்ச்சி ஊக்கிகள் தெளித்தல், உரம் மேலாண்மை, நீர் மேலாண்மை, அறுவடை, சந்தைப்படுத்தல், பற்றியும் பேராசிரியர் கண்ணன் இயற்கை முறையில் காய்கறி தோட்டம் அமைத்தல் மற்றும் இடத் தேர்வு, உர மேலாண்மை, நீர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, அறுவடை மற்றும் காய்கறி பயிர்களின் முக்கியத்துவம் அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் பற்றியும் பேராசிரியர் அருணா காளான் வளர்ப்பு (இடத் தேர்வு, குடிசை அமைத்தல், தாய்வித்து தயாரித்தல், காளான் படுக்கைகள் தயாரித்தல், காளான் அறுவடை) மற்றும் அதன் ஊட்டச்சத்துக்கள் முக்கியத்துவம் பற்றியும் பயிற்சி அளித்தனர். இதில் உழவர் உற்பத்தியாளர் நிறுவன தலைவர் நிர்மலா மற்றும் உறுப்பினர்கள் லட்சுமி நரசிம்மன், துரைசாமி, அஞ்சாலை மற்றும் ஏராளமான ஊர் மக்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழு கலந்து கொண்டு சந்தேகங்களை கேட்டு அறிந்து பயன் பெற்றார்.

மேலும் ஊர் மக்கள் முன்வந்து பயிற்சி செய்தனர். இந்த பயிற்சி மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு ஒரு வேலை வாய்ப்பை உருவாக்கி தருவதாக உள்ளது மற்றும் எஸ்.ஆர்.எம். கல்லூரி மாணவர்கள் மக்களிடையே நஞ்சில்லா உணவு உற்பத்தியை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சூடோமோனாஸ் மூலம் விதை நேர்த்தி செய்வது குறித்து செயல்முறை விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவி




மதுரை, ஜன.31

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆம் ஆண்டு மாணவி சி.சே.இந்துமதி, 24.1.26 அன்று தனது கிராம வேளாண்மை வேலை அனுபவ (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், பொட்டல்கலம் கிராமத்தில் நெல் பயிரில் சூடோமோனாஸ் (Pseudomonas fluorescens) மூலம் விதை நேர்த்தி செய்வது குறித்து செயல்முறை விளக்கக் காட்சி ஒன்றை நடத்தினார்.

இந்த விளக்கக் காட்சியில், நெல் விதைகளை சூடோமோனாஸ் மூலம் நேர்த்தி செய்வது பற்றிய முறைகளை மாணவி விவசாயிகளுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். அதன்படி, ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் பொடியை 400-500 மில்லி நீரில் கலந்து, அதில் விதைகளை 12 மணி நேரம் ஊறவைத்து, பின்னர் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும் என விளக்கினார். இந்த விதை நேர்த்தி முறையால் வேர் அழுகல், இலைப்புள்ளி போன்ற நோய்கள் கட்டுப் படுத்தப்படுவதுடன், நாற்றுகளின் ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் நல்ல முளைப்பு திறன் பெற முடியும் என்றும் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கிராம விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, விதை நேர்த்தி தொடர்பான சந்தேகங்களை கேட்டறிந்தனர். இத்தகைய பயிற்சி நிகழ்ச்சிகள் விவசாயி களிடையே நவீன மற்றும் நிலையான வேளாண்மை தொழில் நுட்பங்களை பரப்புவதற்கு உதவுகிறது என கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# சூரிய சக்தியால் இயக்கப்படும் ஆகாயத்தாமரை அறுவடை இயந்திரம் [Solar-Powered Water Hyacinth Harvester]



**அறிமுகம் :** ஆகாயத்தாமரை (Water Hyacinth) என்பது உலகில் மிகக் குற்றவாளியான, மிக விரைவில் பரவக் கூடிய தாவரங்களில் ஒன்றாகும். நதிகள், ஏரிகள், கால்வாய்கள் போன்ற நீர் வளங்களில் இது மிக வேகமாக பரவி நீர் தட்டில் பசுமை பனி போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறது. இதனால் நீர் வழி போக்குவரத்து தடை, மீன் வளர்ப்பு பாதிப்பு, நீர் சுத்தம் குறைவு, விவசாயத்திற்கு நீர் கிடைக்காமை போன்ற பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இவ்விருப்பத்தைத் தடுக்கவும் நீர் கொடுமையை நீக்கவும் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் மனிதர்களால் கைவினையாகச் செய்யும் அறுவடை மிகவும் காலநிலைவற்றதும், உழைப்பு அதிகமுமாக இருக்கும்.

**இதற்கான சிறந்த தீர்வு :** சூரிய சக்தியால் இயங்கும் நீர் கொடுமை அறுவடை இயந்திரம்.

**இதன் வளர்ச்சி**

- ஒரு நாளில் 5–0 செ.மீ. வரை உயரம்
- ஒரு வாரத்தில் பல மடங்கு பரவல்
- நீர் நிலையின் மீது பட்டு போல் கிழித்தல்

**இதன் விளைவுகள்**

- **நீர் ஓட்டம் தடை :** நீர் வழி போக்குவரத்து முடங்கும்.
- **மீன் வளர்ப்பு பாதிப்பு :** ஆக்சிஜன் குறைவால் மீன் இறப்புகள் அதிகரிக்கும்.

● **நீர் சுத்தம் குறைவு :** நீர் கசிவு, வாசனை, மாசு.

● **விவசாயத்திற்கு நீர் கிடைக்காமை :** நீர் பாய்கள், கால் வாய்கள் முடங்கி விடும்.

**இதில் இயந்திரம் முறையே சிறந்தது. ஏனெனில் :**

- அதிக அளவு நீர் கொடுமையை குறைந்த நேரத்தில் அகற்ற முடியும்
- மனித உழைப்பு குறையும்
- சுற்றுச்சூழல் பாதிப்பு குறையும்
- நீர் ஓட்டம் மற்றும் விவசாய நீர் திரும்ப பெறப்படும்

**எதிர் கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கம்**

சூரியசக்தி நீர் பதுமராகம் அறுவடை இயந்திரம் இன்னும் மேம்படுத்தப்படும் பல வழிகள் உள்ளன

● **ஆட்டோமேன் :** GPS மூலம் தானாக இயக்கம்

● **ரிமோட் கன்ட்ரோல் :** கை கட்டுப்பாடு

● **இயற்கை உரமாக மாற்றம் :** ஆகாயத்தாமரை கழிவு உரமாக மாற்றி விவசாயத்திற்கு வழங்குதல்

● **மின்சாரம் உருவாக்கம் :** நீர் கொடுமை எரித்து பையோமாஸ் மூலம் மின்சாரம்

● இவ்வாறு இது ஒரு பசுமை தொழில் நுட்பம் ஆகும்.

மேலும் விவரங்களுக்கு, **ஜெ.சுரேந்தர், இளங்கலை வேளாண் மாணவன், முனைவர் பா.குணா, இணைப்பேராசிரியர், துறைத் தலைவர் மற்றும் குழு மேற்பார்வையாளர், வேளாண் விரிவாக்கத் துறை, பா.நந்தகுமார், முதுநிலை உதவிப் பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், ம.சுரேஷ், உதவி பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்த வேளாண்மைக் கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி -621 104. மின்னஞ்சல் : surendharj2004@gmail.com, தொலை பேசி எண் : 63854 05168,** தொடர்பு கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# ட்ரைக்கோடெர்மா விரிடி குறித்து செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்




மதுரை, ஜன.31

மதுரை வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர் ரித்திஷ் கோ, தனது (RAWE) கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் ஒரு பகுதியாக, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரம், லக்கையன் கோட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கு ட்ரைக்கோடெர்மா விரிடி குறித்த செயல்விளக்கப் பயிற்சியை நடத்தினார். இந்த நிகழ்ச்சியில், ட்ரைக்கோடெர்மா விரிடி என்னும் பயனுள்ள உயிரணு பூஞ்சையின் உற்பத்தி முறை, பயன்பாடு மற்றும் அதனால் விவசாயிகளுக்கு கிடைக்கும் பலன்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, இந்த உயிரணு பூஞ்சை மண்ணில் காணப்படும் பல்வேறு பூஞ்சை நோய்களை கட்டுப் படுத்தும் திறன் கொண்டது என்றும், வேர் அழுகல், தண்டு அழுகல் போன்ற நோய்களை தடுக்கும் இயற்கை வழி பாதுகாப்பு முறையாக செயல்படுகிறது என்றும் விளக்கப்பட்டது.

மேலும், ரசாயன பூஞ்சை மருந்துகளுக்கு மாற்றாக ட்ரைக்கோ டெர்மா விரிடி பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் உயிரியல் தரம் மேம்படும், பயிர்களின் வளர்ச்சி அதிகரிக்கும், உற்பத்தி செலவு குறையும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். விதை சிகிச்சை, மண் கலப்பு மற்றும் நாற்று நடும் போது பயன்ப டுத்தும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப் பட்டது.

# விவசாயிகளுக்கு டிரைக்கோடெர்மா விரிடியின் பயன்கள் குறித்து செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

நாமக்கல், ஜன.31

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் உள்ள அகரம் கிராமத்தில் பி.ஜி.பி. வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு

மாணவர்கள், தங்களின் இறுதியாண்டு பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு பயிற்சி மற்றும் செயல் விளக்கம் வழங்கினர்.

இந்நிகழ்வில், உயிரி பூசனக்கொல்லியான டிரைக்கோடெர்மா விரிடியின் முக்கியத்துவம், பயன்கள் மற்றும் பயன்பாட்டு முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, மண்ணில் ஏற்படும் பூஞ்சை நோய்களை கட்டுப் படுத்துதல், பயிர்களின் வேர் வளர்ச்சியை மேம்படுத்துதல், மகசூல் அதிகரிப்பு மற்றும் ரசாயன பூச்சிக்கொல்லிகளின் பயன்பாட்டை குறைப்பதில் டிரைக்கோடெர்மா விரிடி வகிக்கும் பங்கு குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

மேலும், விதை சிகிச்சை, மண் சிகிச்சை மற்றும் பயன்பாட்டு அளவு குறித்த நடைமுறை விளக்கங்களும் வழங்கப்பட்டன. இச்செயல் விளக்கம் விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# காளான் வளர்ப்பு பயிற்சி

கோயம்புத்தூர், ஜன.31

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிர் நோயியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் காளான் வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிப்ரவரி 2026 மாதத்திற்கான பயிற்சி 05.02.26 வியாழக்கிழமை அன்று அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விழைவோர் பயிற்சி நாளன்று பயிர் நோயியல் துறையில் பயிற்சிக் கட்டணமான ரூ.850/- நபர் நேரிடையாக செலுத்த வேண்டும். கல்லூரி மாணவர்களுக்கு ரூ.590/- நபர் (அடையாள சான்று அவசியம்). பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சி நேரம் : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், பயிர் நோயியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர். தொலைபேசி : 0422 - 6611336, 6611226, 96294 96555, 63792 98064, மின்னஞ்சல் : pathology@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# கரும்பு துணைப் பொருட்கள் குறித்து பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவி



மதுரை, ஜன.31

மதுரை வேளாண்மை கல்லூரி மாணவி நிரஞ்சனா அவர்கள் இன்று தாமரைகுளம் கிராமத்தில் கரும்பு சாகுபடியை அடிப்படையாகக் கொண்ட கரும்பு துணைப் பொருட்கள் குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இப்பயிற்சியின் நோக்கம், கரும்பு சாகுபடியில் கிடைக்கும் துணைப் பொருட்களை மதிப்பூட்டல் செய்து கூடுதல் வருமானம் பெறுவதற்கான வாய்ப்புகளை விவசாயிகளுக்கு எடுத்துரைப்பதாகும்.

பயிற்சியில் கரும்பு பாகஸ் (Bagasse), கரும்பு மேல் இலைகள் மற்றும் சாறு கழிவுகள் போன்ற துணைப் பொருட்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கப்பட்டது. பாகஸை எரிபொருள், காகிதம் மற்றும் மாட்டுத் தீவனமாக பயன்படுத்தலாம் என்றும், கரும்பு இலைகளை உரமாக மாற்றி மண் வளத்தை மேம் படுத்தலாம் என்றும் கூறப்பட்டது. மேலும் கரும்பு கழிவுகளை கொண்டு ஜீவாமிர்தம், கம்போஸ்ட் போன்ற இயற்கை உரங் களை தயாரிக்கும் முறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப் பட்டது.

இந்த பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களது சந்தேகங்களை கேட்டறிந்து பயன் அடைந்தனர்.

இந்நிகழ்ச்சி தாமரைகுளம் கிராமத்தில் கரும்பு சாகுபடியில் கழிவில்லா விவசாயத்தை ஊக்குவித்து, விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் வகையில் அமைந்தது.